# நாட்டியத்தின் பெருமை

- உடுப்பி ஸ்ரீ லக்ஷ்மி நாராயன்

உலகத்தில் பலவிதமான மனிதர்கள், பலவீதமான பண்புகள் (Culture), பலவீதமான கலைகள் என்று பல தோன்றின. எந்தக் கலையை எடுத்துக் கொண்டாலும், அதில் ஒரு தனிப்பட்ட அம்சங்கள் இருந்து அந்தந்த கலைகளுக்குப் பெருமையைத் தேடி தருகிறது. சித்திரக் கலை, சிற்பம், இசைக் கலை, கவிதைகள். அது மட்டும் ஏன்? சமையல் கலையை எடுத்துக் கொண்டாலும் சரி, அதில் ஒவ்வொரு விதவிதமான ரசனைகள் இருப்பதால்அதை நன்கு ருசித்து அனுபவிக்கிறோம். இந்த அனைத்துக் கலைகளின் சாரத்தையும் எடுத்து நாட்டிய சாஸ்திரத்தைப் படைத்தார்கள் என்று பரத முனிவர்கள் சொன்னார்கள். ''சர்வ சாஸ்தராணி, ஸில்பானி, கர்மாணி, விவிதானி ச அஸ்மின் நாட்டியே சமேதானி தஸ்மா ஏதன் மயாக்ருதம்'' போன்ற இந்த நாட்டியத்தில் பலவிதமான கலைகள் நன்றாக அமைந்திருப்பதைக் காணலாம். இந்த நாட்டியத்தில், 'திருஷ்யம்' 'ஸ்ரவ்யம்' என இரண்டு குணங்களைக் காணலாம். அதாவது 'பார்ப்பதும் ', 'கேட்பதும்', என்று இரண்டு வகைகளும் இருப்பதினால், அனைவரும் இதை ரசிப்பார்கள். மற்ற கலைகளில் பார்ப்பதும் மட்டும் இருக்கும் அல்லது கேட்பது மட்டும் இருக்கும். சித்திரக் கலை, இசைக் கலை போன்ற எந்தக் கலைகளை எடுத்துக் கொண்டாலும், ஏதாவது ஒரு குணம்தான் இருக்குமே தவிர, இரண்டு அம்சமும் ஒன்றாய்ச் சேர்ந்திருப்பது என்பது நாட்டியத்தில் மட்டும் தான். இதில் முத்தமிழும் சேர்ந்திருப்பது விசேஷமான ஒரு அம்சம் என்றே சொல்லலாம். அதனால் தான் மகாகவி 'காளிதாசன்' 'நாட்டியம் பின்னருசே ஜன்ஸ்ய பின்னருக்சேஹ ஜனஸ்ய பகுதா சமாராதனம்' என்று சொன்னார்கள்.

தேவர்களைத் திருப்திபடுத்துவதற்காக முனிவர்கள் யாகம் செய்வார்கள். அந்த யாகத்தினால் தேவர்கள் திருப்தியடைந்து அந்த முனிவர்களுக்கு பிரபலத்தைக் கொடுப்பார்கள். இதுதான் யாகத்தின் பலன். ஆனால் நல்லவிதமான நாட்டியத்தைச் செய்து பார்த்தால் அது இந்த யாகத்திற்குச் சரி சமானம் என்று அர்த்தம்.

எந்த நாட்டியத்தை 'சிவனே' ஆடிக் காட்டி, தான் செய்வது 'தாண்டவம்' என்றும், தன் அர்தாங்கியான 'பார்வதி' செய்வது 'லாஸ்யம்' என்றும் இரண்டு வகைகளாகப் பிரித்து அவர்கள் ஆடியதால் நாட்டியத்தின் பெருமை அதிகமாயிற்று.

இந்த நாட்டியம் என்பது ''சத்வ, ரஜ, ஸ்தமோ'' என்று மூன்று குணங்களைக் கொண்டது. அதாவது, சாத்வீக குணம், ராஜச குணம், தாமச குணம். இதில் சாத்வீக குணம் தான் மிகவும் முக்கியமானது. அதனால் தான் ''அபிநய தர்பணத்தில்'', ''நந்திகேஸ்வரர்''.

''ஆங்கிகம், புவனம், யஸ்ய, வாசிகம் சர்வ வாங்மயம்
ஆகார்யம், சந்தர தாராதி தம் நுமுக சாத்வீகம் சிவம்''

சாத்வீக குணமுள்ள சிவனைத் தான் வணங்கியிருக்கிறார்கள். நாம் எந்த தெய்வத்தை எந்த ரூபத்தில் வணங்கிறோமோ, அந்த எண்ணம் தான் நமக்குள் வந்து சேரும். நாம் தினமும், எந்த காரியத்தைத் செய்கிறோமோ, அச் சுபாவமானது நமக்குள் ஒன்றியிருப்பது இயற்கை. அதனால்தான் சாத்வீக குணத்தையே விரும்பி, அந்த குணமுள்ள நிருத்யத்தைச் செய்வதால், அது யாகத்திற்குச் சமம் என்று கூறுகிறார்கள்.

தெய்வீகமான நிருத்யத்தைப்பார்த்தாலோ, அதைப் பற்றி படித்தாலோ, படிக்க வைத்தாலோ, தெய்வ பக்தி ஏற்படும். நல்ல இசையோடு, பாட்டைப் பாடினாலே பக்தி வரும். ''சங்கீத ஞானமும், பக்திவினா சன்மார்க்கமு கலதே மனசா'' என்று தியாகராஜ ஸ்வாமிகள் பக்தியோடு, மெய் மறந்து, பாடியிருக்கிறார்கள். பாட்டில் நல்ல வார்த்தைகள் அமைந்தாலும், அதனின் பொருளைத் தெரிந்துக் கொள்ளாமல் இருந்தால் பக்தி வருவது கடினம். பலர் இசையை பிரதானமாக்கி, பாட்டிலுள்ள

வார்த்தைகளைக் கவனிக்காமல் பாடுவது உண்டு. அப்படிப் பாடினால் பக்தியும் வராது, மோட்சத்தையும் அடைய முடியாது.

நாட்டியத்தில் வார்த்தைகளைப் புரிந்துக் கொண்டால்தான், அதற்கு அபிநயம் பிடிக்க முடியும். வார்த்தைகளைப் புரிந்துக் கொள்வதில் வித்தியாசம் ஏற்பட்டால் அதன் விளைவு எப்படியாகும் என்பதற்கு ஒரு சின்ன உதாரணம்.

என்னுடைய சிறு வயதில், அறியாமையால் நான் ''தசரா மஷரா'' என்று படித்துக் கொண்டிருந்ததைக் கேட்ட என் தந்தை அவர்கள், என்னைக் கூப்பிட்டு, அதன் பொருளைக் கேட்ட போது, அதை என்னால் கூற முடியவில்லை. அப்பொழுது 'தச', 'ராம', ஷரா' என்ற வார்த்தையைப் பிரித்து ''ராமனுடைய பத்து பாணங்கள்'' என்ற பொருளை சொல்லிக் கொடுத்தார்கள். வார்த்தைகளைச் சரியாக பிரிக்காவிட்டால் அதன் அழகான பொருள் கெட்டுப் போய்விடும்.

''ஆனந்த நடனமாடுவார் தில்லை! ஆனந்த நடனமாடுவார் தில்லை'' என்று பாடுவது ஒரு வேளை வழக்கத்தில் வந்திருக்கலாம். ஆனால் அதையே நாம் பொருள் குற்றம் இல்லாமல் மாற்றிக் கொள்வதில் தவறில்லை என்பது தான் என் கருத்து. ஓரளவேனும், பொருளைத் தெரிந்துக் கொண்டு பாடினால் தான் 'பாவம்' வரும். 'பாவம்' வந்தால் பக்தி வரும். பக்தி வந்தால் தெய்வ கிருபை தானாகவே வரும். தெய்வ கிருபையால் 'மோட்சம்' கிடைக்கும். 'மோட்சம்' என்பது நிரந்தரமான மன சாந்தியாகும்.

''ஆடிப் பாடி அண்ணாமலையைக் கைத் தொழ
ஓடிப் போகும் நமது ஊழ் வினைகளே!''

என்று திருநாவுக்கரசர் பாடியிருக்கிறார்.

நாட்டியத்திற்கு முக்கியமானது நல்ல முறையில் இசையை அமைப்பதே. நல்ல இசையோடு கலந்த பாட்டும், பக்கவாத்யங்களும் பொருத்தமாக இருந்தால், நாட்டியத்திற்கு எந்தவிதமான குறையும் வராது என்று உறுதியாகச் சொல்லுகிறார் பரதர். ஆகவே நல்ல இசையோடு அமைந்த நாட்டியத்தைப் பார்த்தாலே, நம் உடல் நம்மை அறியாமலேயே அசைய ஆரம்பித்து விடும்.

ஒரு நாள் சந்தியா காலத்தில் நாரதன் 'சிவன்' முன்னால் பக்தியோடு பாடிக் கொண்டிருக்கையில் அதைக் கேட்ட சிவன், அதற்குப் பொருத்தமாக ஆடி, அபிநயம் பிடித்து, உடனே அந்தக் கட்டத்தை மாற்றி திபுராசுர சம்ஹாரத்தை எழுப்பி, ஆட ஆரம்பித்தாராம். மகா ஞானியான நாரதரும் உடனே அதற்குப் பொருத்தமாக தன் பாட்டை மாற்றியமைத்து பாட ஆரம்பித்தாராம். இது, இப்பொழுது கூட, சில இடத்தில் அறியாமையினால் நடப்பது உண்டு. ஆகவே, இசையோடு நாட்டியமும், நாட்டியத்தோடு இசையும் இணைந்திருக்க வேண்டும் என்பது தான் பொருள். ஒரு நல்ல காவியத்தை சரியான ''பாவத்தோடு'' நல்ல ''ராகத்தோடு'' எவன் ஒருவன் நன்றாக கற்றுக் கொள்ள செய்கிறானோ, அவனுக்கு ''சரஸ்வதி கடாட்சம்'' கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

நல்ல நாட்டியத்தைச் செய்ய வேண்டுமானால், தெய்வ சிந்தனை தேவை. சிவனையோ, முருகனையோ அல்லது வேறு. எந்த தெய்வங்களைப் பற்றியோ, அறிந்துக் கொண்டோமானால் அந்த தெய்வங்களின் குணாதிசயங்களை புராணங்களில் படித்தோ அல்லது மகான்களிடம் கேட்டறிந்தோ, அந்தந்த தெய்வங்களிடம் மிகவும் நம்பகமான அன்பு வைப்பது தான் தெய்வ பக்தி. இந்த பக்தியினால் அறிந்து கொண்ட திருவிளையாடல்களை நாட்டியத்தில் புகுத்தி, நன்கு அழகாக அமைத்தால், அந்த நாட்டியத்திற்கு வேறு எந்த நாட்டியமும் இணையாகாது.

''ஆடும் மயில் மீது வந்து உறவாடும்'' என்ற பாட்டிலே, ஓடும் மானைத் தேடும் பாவணையோடு வள்ளியினைக் கூடிய வேலவன் வரியில் முருகனின் திருவிளையாடல் நமக்குத் தெரியாவிட்டால்

இந்த பாட்டுக்கு நாட்டியத்தை அமைப்பது மிகவும் கடினம். கதையைப் புரிந்து கொண்டோமேயானால் வள்ளித் திருமணத்தை மிக அழகாக அபிநயம் பிடித்துக் காட்டலாம். இப்படி பல சந்தர்பங்களில் நாட்டியத்தை நன்றாக அமைத்துக் காட்ட இயலும்.

ருக் வேதம், யஜூர் வேதம், சாம வேதம், அதர்வன வேதம் என்கிற நான்கு வேதங்களின் சாரத்தை எடுத்து ஐந்தாவது நாட்டிய சாஸ்திரத்தைச் சிருஷ்டித்தார்கள். வேதங்களின் சாரங்கள் இதில் இருப்பதாலும், தெய்வங்களின் திருவிளையாடல்களை வர்ணிப்பதாலும், 'திருஸ்யம்', 'ஷ்ரவ்யம்' என்ற இரண்டு குணங்களும் இதில் இருந்தாலும் நாட்டியத்திற்குப் பெருமை. சாஸ்திரியமானதன் நாட்டியமும், இவ்வளவு பரிசுத்தமானதனால் தேவனின் பூஜை வேளையில் முக்கியமான உபசாரங்களைச் சொல்லும் போது, நிருத்யத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

பூஜைக்கு வேண்டிய பலவித பொருட்களை வைத்துக் கொண்டு பூஜை செய்த உடனே பகவான் திருப்தியடைவான் என்று சொல்ல முடியவில்லை. நல்ல நல்ல சோஸ்தரங்களை நாட்டிய ரூபத்தில் பிரயோகம் செய்வதால், அதில் இறைவனை திருப்திபடுத்தலாம் என்று பரதமுனிவர் நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறார்.

நாட்டியம் செய்யும் அனைத்து நடனமணிகளுக்கும் உடுப்பி கிருஷ்ணனைப் பற்றி தெரியாமல் இதுக்காது. காரணம் காலம் காலமாக "கிருஷ்ணா நீ பேகனே பாரோ", "ஜகதோத்தாரன" இப்படி பல பாட்டுக்களை நாட்டியத்தில் அபிநயம் செய்வதற்கு பிரசித்தி பெற்றவை. இந்த உடுப்பி கிருஷ்ணன் எப்படி வந்தான் என்பதற்கு ஒரு கதையிருக்கிறது.

'அத்வைத' மதத்திற்கு அதிசங்கரர் எப்படியோ, 'த்வைத' மதத்தை - நிர்மாணம் செய்தவர் ஸ்ரீமன் மத்வாச்சாரியார். இவர் ஒரு சந்யாசி, யோகி. ஒரு நாள் கிருஷ்ணனுடைய விக்ரகத்தை சமுத்திரக் கரையிலிருந்து உடுப்பிக்குத் தலை மேல் தூக்கிக் கொண்டு மூன்று மைல் தூரம் நடந்து வரும் போது, ஸ்தோத்திரம் செய்து நடனமாடிக் கொண்டே வந்தார்களாம்.

755 வருடங்களுக்கு முன்னால் ஒரு மகாயோகி, மெய் மறந்து பாடி, ஆடினார் என்றால் அவருடைய பக்திதான் காரணம் என்று புரிந்துக் கொள்ளவேண்டும். பக்தர்கள் எல்லாம் இப்படி ஆடிக்கொண்டே பாடியிருக்கிறார்கள். 'புரந்தர தாஸர்', 'தியாகராஜர்', 'மீராபாய்', 'சந்த துகாராம்', இவர்கள் அனைவரும் ஆடிப்பாடி, பகவானைத் திருப்திப்படுத்தி முக்தியடைந்தார்கள்.

ஆகையால் எந்த நடனம் செய்தாலும், அதில் பக்தி இருக்கவேண்டும். பக்தியோடு இணைந்த நாட்டியத்தைப் பார்த்தால், பகவான் திருப்தியடைந்து நமக்கு அனுக்கிரகம் செய்வார். அந்த அனுக்கிரகத்தினால் ரசிகர்களின் ஆதரவு கிடைக்கும். அதன் மூலம் இந்த நாட்டியத்தை பல இடத்தில் பிரசாரம் செய்யலாம். அதனால் இந்த சாஸ்திரிய நிருத்யத்திற்குள்ள பெருமை பலமடங்காக விருத்தியடையும்.

யோகசானங்கள் செய்தால் உடல் பயிற்சி, ப்ராணயாமம் செய்தால் மன பயிற்சி மட்டும் தான் ஏற்படும். நாட்டியப் பயிற்சியால் உடல் பயிற்சியும் மனபக்குவமும், இரண்டுமே ஒரே சமயத்தில் கிடைக்கும். நல்ல முறையோடு நாட்டிய பயிற்சி செய்தால் வாழ்க்கையில் ஆரோக்கியமாக இருப்பார்கள். பலவிதமான செல்வங்கள் இருந்தும், தேக நிலை சரியாக இல்லாவிட்டால், வாழ்க்கையில் எந்த சுகத்தையும் அனுபவிக்க முடியாது. அதனால் இந்த பரிசுத்தமான பரத நாட்டியத்தை கவனத்தோடு சிறந்த முறையில் கற்றுக்கொண்டு, உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள். தன்னைத் தானே காப்பாற்றி கொள்ளவேண்டும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதை நாட்டியப் பயிற்சியால் தான் பெற முடியும் என்று கூறி அனைவரும் வாழ்க்கையில் சுகமாக வாழவேண்டும் என்று மனதார நினைத்து இறைவனைப் பிரார்திக்கிறேன்.

வணக்கம்!